தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மடத்துக்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில், மடத்துக்குளம் பகுதி வருவாய்த் துறையால் தாலுகாவாக நிலை உயர்த்தப்பட்ட காரணத்தால், அதனை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்கு, உரிய கருத்துகள் துறை வாரியாகப் பெறப்பட்டு, அரசின் ஆய்வில் உள்ளது. இதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

சமையல் எரிவாயு உருளை கசிவினால் ஏற்படும் விபத்துகளைக் கட்டுப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் மற்றும் திரு. க. தினகரன் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

***திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமையல் எரிவாயு உருளை கசிவினால் ஏற்படும் விபத்துகளைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம்" குறித்து அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

2014 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

சமையல் எரிவாயு உருளைகள் மைய அரசின் பொதுத் துறை நிறுவனங்களான எண்ணெய் நிறுவனங்களால் திரவ பெட்ரோலிய வாயு (LPG) நிரப்பப்பட்டு முகவர்கள்மூலம் நுகர்வோருக்கு அளிக்கப்படுகிறது.

பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் மூலம், வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து எரிவாயு உருளைகளும் எரிவாயு நிரப்பும் பணிமனைகளில் முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே எரிவாயு முகவர்களுக்கும், முகவர்களிடமிருந்து வாடிக்கையாளர்களுக்கும் அனுப்பப்படுகின்றன. மேலும், எரிவாயு உருளைகளில் ஏற்படும் எரிவாயு கசிவு, அதனால் உருவாகும் வாசம் மற்றும் உருளைகளில் வேறு ஏதேனும் சேதம் ஏற்பட்டுள்ளனவா என்பது குறித்தும் முகவர்களால் நன்கு பரிசோதிக்கப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

வாடிக்கையாளர்களுக்கு எரிவாயு உருளைகளை வழங்கும்பொழுது எரிவாயு உருளையின் முகப்புப் பகுதியில் உள்ள 'O' ரிங் வால்வில் கசிவு உள்ளதா என்றும், அவை சரியான எடை கொண்டுள்ளனவா என்பது போன்ற அனைத்து பரிசோதனைகளையும் செய்த பின்னரே வாடிக்கையாளர்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

வாடிக்கையாளர்கள், எரிவாயு உருளையைப் பேணிப் பாதுகாத்து, பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவது குறித்து எண்ணெய் நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் எரிவாயு முகவர்கள்மூலம் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு முகாம்கள் உரிய முறையில் அவ்வப்போது நடத்தப்படுகின்றன. இருந்தபோதிலும், எரிவாயு உருளைகளைக் கையாளும்போது, இரவு நேரத்தில் எரிவாயு உருளையின் ரெகுலேட்டரை மூடாமல்

விடுவது; எரிவாயு இணைப்புக் குழாய்களில் ஏற்படும் கசிவுகளைச் சரிவர கவனிக்காமல் விட்டுவிடுவது; எரிவாயு கசிவு ஏற்பட்டுள்ளதைக் கவனிக்காமல் மின்சாரத்தைப் பயன்படுத்துவது; வீட்டு உபயோக எரிவாயு உருளைகளிலிருந்து, தொழில்ரீதியான எரிவாயு உருளைக்கு சட்டத்திற்குப் புறம்பாக எரிவாயுவை மாற்றுவது; தரச்சான்று வழங்கப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தாதது போன்ற கவனக் குறைவான செயல்களால் விபத்து ஏற்படுகிறது.

எனவே, நுகர்வோர், எரிவாயு கசிவு ஏற்படின், மின்சாதனப் பொருள்களைப் பயன்படுத்தாமல் இருப்பதும், சன்னல்கள், கதவுகள் ஆகியவற்றை உடனடியாகத் திறந்து காற்றோட்டமான சூழ்நிலை ஏற்படுத்துவதும், உடனடியாக எண்ணெய் நிறுவனங்களின் உதவி சேவை மையத்தைத் தொடர்பு கொண்டு அவர்களைக் கொண்டு கசிவினை சரிப்படுத்திடவும் வேண்டும். மேலும், விபத்துகளைத் தவிர்க்க எண்ணெய் நிறுவனங்கள், எரிவாயு முகவர்கள், நுகர்வோர் ஆணையர் மற்றும் மாவட்டங்களில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டு அடிக்கடி விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

திரு. க. தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். சமீப காலங்களில் சமையல் எரிவாயு கசிவினால் ஏற்படும் விபத்துகளினால் பலர் இறந்துள்ளனர், படுகாயம் அடைந்துள்ளனர். கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும் கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், சென்னை என பல இடங்களில் இதுபோன்ற விபத்துகள் ஏற்பட்டுள்ளன. முன்பெல்லாம் என்றாவது ஒரு நாள் அங்கொன்றும் இங்கொன்றுமாக விபத்துகள் ஏற்படும். சமையல் எரிவாயுவை விநியோகிக்கும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு அரசின் சார்பில் தகுந்த ஆலோசனைகளை வழங்கி தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதோடு தியேட்டர்கள், தொலைக்காட்சிகளில் விளம்பரப் படங்கள் மூலமும், பத்திரிகை விளம்பரங்கள் மூலமும், துண்டுப் பிரசுரங்கள் மூலமும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டுகிறேன்.

2014 ஆகஸ்ட் 5]

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிவாயு உருளைகளில் எரிவாயு நிரப்பும் பணி, மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள I.O.C., B.P.C. மற்றும் H.P. நிறுவனங்களின் மூலம்தான் நடைபெறுகிறது. எரிவாயு பணிமனைகளில் முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே, எரிவாயு உருளைகள் முகவர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் அனுப்பப்படுவது, அரசால் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. இருந்தபோதிலும், காலாவதியான பழைய உருளைகள் மாற்றப்படாமல் வீடுகளில் தங்கிப்போவதும், உருளைகளைப் பாதுகாப்பான முறையில் பயன்படுத்தாமல் இருப்பதும், இரவு நேரத்தில் ரெகுலேட்டரை சரியாக மூடாமல் இருப்பதும், எரிவாயு இணைப்புக் குழாய்களில் கசிவு ஏற்படுவதைக் கண்காணிக்காமல் மின்சார சாதனங்களைப் பயன்படுத்துவதும், விபத்துகளுக்குக் காரணமாகி விடுகின்றன.

இதுமட்டுமல்லாமல், தரமற்ற இரப்பர் குழாய்கள் போன்ற உபகரணங்களைப் பயன்படுத்துவது, வீட்டு உபயோக உருளைகளை வர்த்தக நிறுவனங்களிலும், வர்த்தக நிறுவனங்களுக்கான உருளைகளை வீடுகளிலும் பயன்படுத்துவது, பர்னர்களை மாற்றி உபயோகிப்பது போன்ற நுகர்வோரின் நடவடிக்கைகளும் விபத்துகளை ஏற்படுத்தி விடுகின்றன. விபத்துகளைத் தவிர்ப்பதற்கும், நுகர்வோரைப் பாதுகாப்பதற்கும், மாதந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர், எரிவாயு உருளை நுகர்வோர் விழிப்புணர்வுக் கூட்டம் நடத்த வேண்டுமென, தமிழக மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்ற மக்கள் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், கடுமையான கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள், எண்ணெய் நிறுவனங்களின் களப் பணியாளர்கள் மற்றும் விஜிலென்ஸ் குழு, உணவுப் பொருள் கடத்தல் குற்றப் புலனாய்வுத் துறை ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள்.

[திரு. இரா. காமராஜ்] [2014 ஆகஸ்ட் 5

மாண்புமிகு அம்மா அவர்களின் கடுமையான உத்தரவுகளால், கடந்த மூன்று ஆண்டுகளில் எரிவாயு உருளை முறைகேடுகளில் ஈடுபட்ட 11,140 பேர்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பிலான உருளைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தொடர் குற்றங்களில் ஈடுபட்ட 27 நபர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ், அதாவது B.M. Act–ன்கீழ் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவை தவிர, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையினர், ஒவ்வொரு மாதமும், மாவட்டங்களில் உள்ள பள்ளிகள், கல்லூரிகளில் எரிவாயு உருளைகளைப் பயன்படுத்தும்போது விபத்து ஏற்படாவண்ணம் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள், விபத்துக் காலங்களில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விரிவான விழிப்புணர்வு முகாம்களை நடத்தி வருகின்றனர்.

எரிவாயு உருளை உபயோகப்படுத்துபவர்கள் I.O.C., B.P.C. மற்றும் H.P. ஆகிய மூன்று எண்ணெய் நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட அனைத்துப் புகார்களையும் ஒரே எண், அதாவது common number *"155233"* என்ற toll free எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிப்பதுடன், தேவையான ஆலோசனைகளும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த எண்ணில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை தொலைபேசி மூலமாகவும், இரவு 8 மணி முதல் மறுநாள் காலை 8 மணி வரை IVRS எனப்படுகின்ற குரல் பதிவு முறையிலும் புகார்களைப் பதிவு செய்து, விவரங்களைப் பெற முடியும்.

எரிவாயு உருளைகள் சம்பந்தமான விபத்துகள் பெரும்பாலும் நுகர்வோரின் கவனக் குறைவால் மட்டுமே ஏற்படுகின்றன என்று எண்ணெய் நிறுவனங்களும், விநியோகஸ்தர்களும் கூறினாலும், அவர்களுக்கும் சமூகப் பொறுப்பும், அக்கறையும் இருக்க வேண்டும் என்று நுகர்வோர் விழிப்புணர்வு முகாம்களில் வலியுறுத்தப்படுகிறது. அதன் அடிப்படையில், எரிவாயு உருளைகளால் ஏற்படும் விபத்துகளைத் தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதுடன், இவ்வகை விபத்துகளால் ஏற்படும் இழப்பினை ஈடு செய்வதற்கு ரூ.10 இலட்சம் வரை காப்பீடு வழங்க விபத்துக் காப்பீடு திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கும் மேலான அதிகமாக இழப்புகள் ஏற்படும்போது, Common Insurance Policy என்கின்ற பொது காப்பீடு ஒன்றினையும் ஏற்படுத்தி,

2014 ஆகஸ்ட் 5] [திரு. இரா. காமராஜ்]

அதன்மூலமாகவும் நுகர்வோரின் நலன் பாதுகாக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கருவிலும், சிசு பருவத்திலும்கூட இழப்பு ஏற்படக்கூடாது என, தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டுவந்தார் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த காலங்களோடு ஒப்பிடுகிறபோது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த இந்த மூன்றாண்டுகளில் இறப்பு சதவிகிதம் மிகவும் குறைந்திருக்கிறது. அந்த அடிப்படையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். யாராவது ஒருவர் கேளுங்கள். உங்கள் கட்சியிலேயே நான்கு பேர் எழுந்து நின்றால் எப்படி? மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நீங்கள் சொல்லுங்கள்.*

முற்பகல் 11–20

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய சில பிரச்சினைகள், பதற்றம் ஆகியவற்றை அவசரப் பொது முக்கியத்துவம் கருதி, அரசுக்கு கவன ஈர்ப்பின் மூலமாக நாங்கள் கொண்டு வருகிறோம். அந்த வகையில் வறட்சியின் காரணமாக காய்கறிகளின் உற்பத்தி என்பது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், என்ன விஷயம்? (குறுக்கீடு)*